நீர்வளத்துறை

அனுப்புநர்

பொறி.அருள் அழகன்,பி.இ,
செயற்பொறியாளர்,நீவது,
பவானிசாகர் அணைக்கோட்டம்,
பவானிசாகர் - 638 451.

பெறுநர்

மாவட்ட வருவாய் அலுவலர்,
கோயம்புத்தூர் மாவட்டம்,
கோயம்புத்தூர்.

கடித எண்.வப / இவஅ.3 / கோ.73 / 900 / 2023 / நாள். 7 -11-2023

அய்யா,

பொருள் அணுகுபாலம் - கோயம்புத்தூர் மாவட்டம் - சூலூர் வட்டம் - பட்டணம் கிராமம் - திரு.கே.ஹர்ஸ்வந்த் என்பவருக்கு பாத்தியப்பட்ட புல எண்.279/1B5 மற்றும் 280/1A -க்கு செல்ல இடையிலுள்ள புல எண்.279/2 மற்றும் 280/2-ல் செல்லும் ஓடையின் குறுக்கே அணுகுபாலம் அமைக்க அனுமதி கோரிய மனு- நீர்வளத்துறையின் தொழில்நுட்ப கருத்துரு அனுப்புதல் - தொடர்பாக.

பார்வை

1. மாவட்ட வருவாய் அலுவலர், கோயம்புத்தூர் அவர்களின் நடப்பு கடித எண்.I159407 / 2022 / ஆ4 / நாள்.26.09.2023.
2. உதவிசெயற்பொறியாளர்,நீவது, பாசன உபகோட்டம், கோயம்புத்தூர் அவர்களின் கடித எண்.கோ.58 / 2023 / நாள்.16.10.2023.

****

பார்வை 1-ல் காணும் மாவட்ட வருவாய் அலுவலர், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் அவர்களின் கடிதத்தில் கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், பட்டணம் கிராமம் புல எண்.279/2 மற்றும் 280/2-ல் செல்லும் ஓடையின் குறுக்கே அணுகுபாலம் அமைக்க திரு.கே.ஹர்ஸ்வந்த் என்பவர் அனுமதி கோரி மனு அளித்துள்ளதாகவும், இந்நேர்வில் மேற்படி அணுகுபாலம் அமைக்க ஆகும் செலவினத்திற்கான மதிப்பீட்டினை கணக்கிட்டு அதன் விவரத்தினையும், தொழில்நுட்ப கருத்துருவையும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டதற்கு நீர்வளத்துறையின் தொழில்நுட்ப கருத்துரு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

கோயம்புத்தூர் மாவட்டம், நீலிகோணம்பாளையம், 180, பழனியப்பா லே அவுட் என்ற முகவரியில் வசித்து வரும் திருகந்தசாமி என்பவரின் மகன் திரு.கே.ஹர்ஸ்வந்த் என்பவருக்கு கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், பட்டணம் கிராமத்தில் புல எண்.279/1B5 மற்றும் 280/1A காலையில் பு.ஏ.2.19.5 பூமியானது பாத்தியப்பட்டது என்பது கிராம நிர்வாக அலுவலர், பட்டணம் கிராமம், சூலூர் வட்டம் அவர்களின் சான்றுபடி தெரிய வருகிறது.

மேற்கண்ட திரு.கே.ஹர்ஸ்வந்த் என்பவருக்கு பாத்தியப்பட்ட கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், பட்டணம் கிராமம் புல எண்.279/1B5 மற்றும் 280/1A -க்கு கிழக்கில் புல எண்.279/2 மற்றும் 280/2-ல் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஓடை செல்கிறது எனவும், மேற்கண்ட ஓடையின் கிழக்கு புறத்தில் மனுதாரின் பூமிக்கு செல்லும் வகையில் கிழமேல்

தார்சாலை நிலையிலுள்ளது. பூமியின் முழு நீளத்திற்கும் கிழக்கு மேற்காக தார்சாலை அமைந்துள்ளது. மனுதாரின் பூமிக்கு செல்ல புல எண்.279/2 மற்றும் 280/2-ல் செல்லும் ஓடையின் குறுக்கே அணுகுபாலம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஓடையில் செல்லும் அதிகபட்ச நீரளவு 80.00 கனஅடி/ விநாடி எனவும், மேலும், ஓடையின் குறுக்கே 9.14 மீ நீளத்திலும், 2.50 மீ அகலத்திலும், 1.50 மீ உயரத்திலும் ஒரு நீர்வழி கண்ணறையுடன் கூடிய அணுகுபாலம் அமைக்கும் பொழுது ஓடையின் குறுக்கே அமைக்கப்படும் அணுகுபாலத்தின் வழியே 84.00 கனஅடி / விநாடி செல்லும் என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே, ஓடையின் முழு கொள்ளளவு தண்ணீர் செல்லும் அளவைவிட அணுகுபாலத்தின் கண்ணறையின் வழியாக வெளியேறும் நீர் அதிகமாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளதாலும், பார்வை 2-ல் காணும் உதவிசெயற்பொறியாளர்,நீவது, பாசன உபகோட்டம், கோயம்புத்தூர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும், திரு.கே.ஹர்ஸ்வந்த் என்பவருக்கு பாத்தியப்பட்ட கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், பட்டணம் கிராமம் புல எண்.279/1B5 மற்றும் 280/1A -க்கு செல்ல புல எண்.279/2 மற்றும் 280/2-ல் செல்லும் ஓடையின் குறுக்கே 9.14 மீ நீளம் (Carriage Way), 2.50 மீ அகலம், 1.50 மீ உயரமுள்ள அளவுகளில் ஒரு நீர்வழி கண்ணறையுடன் அணுகுபாலம் கட்டுவதற்கான நீர்வளத்துறையின் தொழில்நுட்ப கருத்துரு இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

செயற்பொறியாளர்,நீவது,
பவானிசாகர் அணைக்கோட்டம்,
பவானிசாகர் - 638 451.